**செ. வெ. எண்.405** **நாள். 14.8.2015**

# <u>செய்தி வெளியீடு</u>

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (14.8.2015) மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் நடைபெற்றுவரும் சாலை மற்றும் பாலப்பணிகளின் முன்னேற்றம் குறித்து நெடுஞ்சாலைத்துறையின் முதன்மைச் செயலாளர், தலைமைப் பொறியாளர்கள், கண்காணிப்பு பொறியாளர்கள் மற்றும் ஏனைய அலுவலர்களுடன் ஆய்வு மேற்கொண்டார்.

சென்னை மாநகரம், **திருமங்கலம் சாலை சந்திப்பு மற்றும் மூலக்கடை சாலை சந்திப்பு** ஆகிய இடங்களில் கட்டப்பட்டுவரும் உயர்மட்ட பாலம் 90% முடிவடைந்துள்ளதால் மீதப்பணிகளை துரிதமாக முடித்து **2015** செப்டம்பர் இறுதிக்குள் பணிகள் முடித்து பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படவேண்டும் என கேட்டுக்கொண்டார். **திருவெற்றியூர் மாட்டுமந்தை இடத்தில் கட்டப்பட்டுவரும் இரயில்வே மேம்பாலப்பணியின் முன்னேற்றத்தை** ஆய்வு செய்து இவ்வாண்டு இறுதிக்குள் பணி முடிக்கப்பட வேண்டும் எனவும், **வியாசர்பாடி இரயில்வே மேம்பாலப்பணியில்** இரயில்வே துறையினால் செய்யப்படும் பணியினை விரைந்து முடிக்க நடவடிக்கை எடுக்கவும், அதன் தொடர்ச்சியாக பால இணைப்பை பூர்த்தி செய்து **2015** அக்டோபர் மாதத்திற்குள் ஒரு பக்கத்தில் (One leg) போக்குவரத்தை அனுமதிக்கவும், ஊரப்பாக்கம் இரயில்வே பாலத்தை விரைவில் திறக்கவும் பணி மேற்கொள்ள அறிவுறுத்தினார். அதைபோலவே **திருச்சி இரயில்வே நிலையத்திற்கு அருகில் ரூபாய் 82 கோடி செலவில் கட்டப்பட்டுவரும் உயர்மட்ட பாலத்தின்** முன்னேற்றத்தை ஆய்வு செய்தார். திருச்சி – மதுரை சாலை, திருச்சி – திண்டுக்கல் சாலை , திருச்சி – சென்னை சாலை ஆகியவற்றை இணைக்கும் வகையில் கட்டப்படும் பாலத்தின் பகுதிகளை **2015** டிசம்பர் திங்களுக்குள் முடிப்பதற்கு அறிவுறுத்தினார்.

2014 – 15–ம் நிதியாண்டில் ஒருங்கிணைந்த சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் ரூபாய் 2688 கோடி செலவில் 1279 கி.மீ. சாலைகளை அகலப்படுத்துதல், 2151 கி.மீ. சாலைகளை மேம்படுத்துதல், 259 எண்ணிக்கையிலான பாலங்கள் / சிறுபாலப் பணிகள் மேற்கொள்ள ஆணை வழங்கப்பட்டதில் தற்போதைய முன்னேற்றத்தை ஆய்வு செய்து மீதமுள்ள பணிகளை விரைந்து முடிக்க உத்திரவிட்டார்.

மத்திய சாலை நிதித்திட்டத்தின்கீழ் (RCRF) 2015–16 நிதியாண்டிற்கு ரூ. 390 கோடி செலவில் 485 கி.மீ. நீள சாலைப்பணிக்கு அங்கீகாரம் பெறப்பட்டதால் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளது. மேலும் மைய அரசு இந்நிதியாண்டில் ரூ. 1242 கோடிக்கு ஒப்புதல் தந்துள்ளதால் அதற்கான பணிகளை செயலாக்க நடவடிக்கை எடுக்கப்படுவதை ஆய்வு செய்தார். **பொள்ளாச்சி – கோவை சாலையினை நான்கு வழிச்சாலையாக அகலப்படுத்த மத்திய அரசு அங்கிகரித்துள்ளது.** மதிப்பீடுகள் தயார் செய்து விரைவில் ஒப்பந்தம் கோரப்படவுள்ளது.

2014–15–ம் நிதியாண்டில் நபார்டு வங்கி உதவியுடன் 88 ஆற்றுப்பாலங்கள் கட்டுவதற்கு ஒப்புதல் வழங்கப்பட்டதில் 2 பாலங்கள் கட்டி முடிக்கப்பட்டதால் மீதமுள்ள 86 பாலப்பணிகளின் முன்னேற்றத்தை ஆய்வு மேற்கொண்டார். கடந்த நான்கு நிதியாண்டுகளில் தமிழகமெங்கும் நெடுஞ்சாலைத்துறையில் 1249 சிறு மற்றும் உயர்மட்ட பாலங்கள் ரூபாய் 1526 கோடி செலவில் கட்டப்பட்டுள்ளதை சுட்டிக்காட்டி எஞ்சிய பணிகளை இந்நிதியாண்டில் சிறப்பாக மேற்கொள்ளவும் அறிவுறுத்தினார்.

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**